செய்தி வெளியீடு எண்– 393 நாள்–15.5.2010

# மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்துசமய அறநிலையத்துறை திருக்கோயில் பணியாளர்களின் மகன்/மகளுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்

* * * * * * * * *

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (15.5.2010) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்துசமய அறநிலையத்துறை திருக்கோயில் பணியாளர்களின் மகன்/மகளுக்கு மடிக்கணினி (Lap Top) வழங்கி வாழ்த்துகளை தெரிவித்தார்.

2009–2010ஆம் ஆண்டு நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை மான்யக் கோரிக்கையின் போது மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், “மேல்நிலை பள்ளித் தேர்வில் தேர்ச்சி பெற்று உயர்கல்வி பயிலும் திருக்கோயில் பணியாளர்களின் மகன் அல்லது மகளுக்கு, அவர்கள் +2 தேர்வில் பெற்ற மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில், முதல் 100 மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படும்” என்றும் “அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் தொழில் சார்ந்த பட்டப்படிப்பு பயிலும் திருக்கோயில் பணியாளர்களின் மகன் அல்லது மகளுக்கு முதல் ஆண்டு கல்விக் கட்டணத்தில் 25 சதவிகிதத் தொகை நிதியுதவியாக வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

இந்த நலத்திட்ட அறிவிப்புகளின்படி மேல்நிலைப் பள்ளித் தேர்வில் தேர்ச்சி பெற்று உயர்கல்வி பயிலும் திருக்கோயில் பணியாளர்களின் மகன் அல்லது மகளுக்கு மொத்த மதிப்பெண்கள் அடிப்படையில், மடிக்கணினி வழங்கவும், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் தொழில் சார்ந்த பட்டப்படிப்பில் சேர்ந்து பயிலும் திருக்கோயில் பணியாளர்களின் மகன் அல்லது மகளுக்கு முதல் ஆண்டு கல்விக் கட்டணம் வழங்கவும் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

இதன்படி +2 தேர்வில் தேர்ச்சி பெற்ற 90 மாணவர்களுக்கு :மொத்தம் ரூ. 30 இலட்சம் மதிப்பில் மடிக்கணினிகளும், மூன்று மாணவர்களுக்கு முதலாம் ஆண்டு கல்விக் கட்டணத்தில் 25 சதவிகிதத் தொகையாக ரூ. 5,325/– நிதியுதவியும் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர், திரு க.முத்துசாமி, அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை, ஆணையாளர், திரு ப.ரா.சம்பத் அவர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்தறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * * * * * *

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–9.